Q.C-122

**DEPARTMENTAL EXAMINATIONS (COMPUTER BASED TEST)**

**Name of the Test**

| | |
|---|---|
| The Civil and Criminal Judicial test for Members of the Judicial Department-Part - I (Without Books) | 105 |

Maximum Time: Two Hour

Maximum Marks: 80

## ***IMPORTANT INSTRUCTIONS***

## OBJECTIVE TYPE

கொள்குறி வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்கத் தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளைக் கவனமாகப் படிக்கவும்.

1. This computer based Test contains 80 number of questions in objective Type.
   இந்தக் கணினி வழித் தேர்வானது, 80 கொள்குறி வகையிலான வினாக்களைக் கொண்டது.

2. Answer all questions. Each question carries one mark
   அனைத்து வினாக்களுக்கும் விடையளிக்கவும் ஒவ்வொரு வினாவும் ஒரு மதிப்பெண் உடையது.

3 In case of doubt, English version is the Final.
   வினாக்களில் சந்தேகம் இருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

4. Words of masculine gender in these questions shall, where the context so require, be taken to include feminine gender.
   இந்த வினாக்களில் இடம் பெற்றுள்ள ஆண் பாலினத்தவரின் வார்த்தைகளில் தேவைப்படின், சூழலுக்கேற்ப பெண் பாலினத்தவரின் வார்த்தைகளும் அடங்கும்

5. Before answering the questions in CBT, candidates should read the following instructions displayed in the monitor:
   விண்ணப்பதாரர்கள் கணினி வழித் தேர்விற்கு விடையளிக்கத் தொடங்கும் முன் கணினியின் திரையில் தோன்றும் அறிவுரைகளை கவனமாகப் படிக்கவும்.

**a)** One question will be displayed on the screen at a time.
ஒரே நேரத்தில் ஒரு வினா மட்டுமே கணினித் திரையில் தோன்றும்.

**b)** Time available for you to complete the examination will be displayed through a countdown timer in the top right-hand corner of the screen. It will display

1. Which law commission Report made detailed recommendation regarding proposed changes in the Criminal Procedure Code?
குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் உத்தேச மாற்றங்கள் தொடர்பாக விரிவான பரிந்துரைகளை வழங்கிய சட்ட ஆணைக்குழுவின் அறிக்கை எது?

(A) 41st Report, 1969
41வது அறிக்கை, 1969

(B) 42nd Report, 1971
42வது அறிக்கை, 1971

(C) 43rd Report, 1971
43வது அறிக்கை, 1971

(D) 40th Report, 1969
40வது அறிக்கை, 1969

2. The Metropolitan Court can be constituted if the population of city or town exceeds
நகரம் அல்லது நகரத்தின் மக்கள்தொகை ———— க்கு அதிகமாக இருந்தால் பெருநகர நீதிமன்றம் அமைக்கப்படலாம்.

(A) Twenty Million
இருபது மில்லியன்

(B) Five Million
ஐந்து மில்லியன்

(C) Ten Million
பத்து மில்லியன்

(D) One Million
ஒரு மில்லியன்

3. I. A Civil Judge can be invested with the powers of Additional Sessions Judge
ஒரு உரிமையியல் நீதிபதி கூடுதல் அமர்வு நீதிபதியின் அதிகாரங்களை பெறலாம்.

II. High Court may confer the powers of Judicial Magistrate on Civil Court Judge if necessary
தேவைப்பட்டால் உரிமையியல் நீதிமன்ற நீதிபதிக்கு உயர் நீதிமன்றம் நீதித்துறை நடுவரின் அதிகாரங்களை வழங்கப்படலாம்.

(A) I and II are true
I மற்றும் II என்பது உண்மை

(B) I is false and II is true
I என்பது தவறானது, II என்பது உண்மை

(C) I is true and II is false
I என்பது உண்மை, II என்பது பொய்

(D) I and II are false
I மற்றும் II தவறானவை

4. By which Amendment, the offences under the section 376 of IPC shall be tried as far as practicable by court presided over by woman?
இந்திய தண்டனைச் சட்டத்தின் 376 வது பிரிவின் கீழ் உள்ள குற்றங்கள், பெண் நீதிபதி தலைமை வகிக்கும் நீதிமன்றத்தால் நடைமுறைக்கு சாத்தியமான அளவுக்கு விசாரிக்கப்பட வேண்டும் என கூறிய திருத்தம் எது?

(A) Criminal Law of Amendment Act, 2013
குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம், 2013

(B) Criminal Law of Amendment Act, 2016
குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம், 2016

(C) Criminal Law of Amendment Act, 2015
குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம், 2015

(D) Criminal Law of Amendment Act, 2017
குற்றவியல் சட்டத் திருத்தச் சட்டம், 2017

5. An Assistant Sessions Judge may pass any sentence except
ஒரு உதவி அமர்வு நீதிபதி பின்வருவனவற்றைத் தவிர வேறு ஏதேனும் தண்டனையை வழங்கலாம்

(A) Sentence of death
மரண தண்டனை

(B) Sentence of death or imprisonment for life or imprisonment exceeding 10 years
மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத் தண்டனை அல்லது 10 வருடங்களுக்கு மேற்பட்ட சிறைத்தண்டனை

(C) Sentence of death or imprisonment for life
மரண தண்டனை அல்லது ஆயுள் சிறைத்தண்டனை

(D) Imprisonment for life
ஆயுள் சிறைத்தண்டனை

6. On any contrary provision, the procedure for holding trial in camera will be based on
எந்தவொரு விதிக்கு முரணான மறைவரங்கில் விசாரணை நடத்துவதற்கான நடைமுறை பின்வருவனவற்றை அடிப்படையாகக் கொண்டிருக்கும்.

(A) Official Secrets Act, 1923
உத்தியோக பூர்வ இரகசியங்கள் சட்டம், 1923

(B) Civil Procedure Code, 1908
உரிமையியல் நடைமுறைச் சட்டம், 1908

(C) Criminal Procedure Code, 1973
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973

(D) The General Clauses Act, 1897
பொது உட்பிரிவுகள் சட்டம், 1897

7. The offence punishable with death or imprisonment for life if committed by a person below the age of 16 years can be tried exclusively by
16 வயதிற்குட்பட்ட ஒருவரால் மரண தண்டனை அல்லது ஆயுள் தண்டனை விதிக்கக்கூடிய குற்றம் செய்யப்பட்டால் விசாரிக்கும் நீதிமன்றம்

(A) Special Courts under the children Act, 1960
குழந்தைகள் சட்டம், 1960ன் கீழ் சிறப்பு நீதிமன்றங்கள்

(B) Sessions Court
அமர்வு நீதிமன்றம்

(C) Court of the Chief Judicial Magistrate
தலைமை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

(D) Judicial Magistrate Court
நீதித்துறை குற்றவியல் நடுவர் நீதிமன்றம்

8. The offences for which Police officer may arrest without warrant is mentioned in ________ of Criminal Procedure Code, 1973.
பிடியாணையின்றி காவல் அலுவலர் கைது செய்யக்கூடிய குற்றங்கள் பற்றி குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ————யில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(A) Schedule IV
அட்டவணை IV

(B) Schedule V
அட்டவணை V

(C) Schedule III
அட்டவணை III

(D) Schedule I
அட்டவணை I

9. The Police officer may arrest a person who does not comply with notice of appearance under section __________ of the Criminal Procedure Code, 1973.
காவல் அலுவலர் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ———— யின் கீழ் ஆஜராவதற்கான (முன்னிலையாவதற்கான) அறிவிப்பிற்கு இணங்காத ஒருவரை கைது செய்யலாம்.

(A) Section 41A(1)
பிரிவு 41A(1)

(B) Section 41A(2)
பிரிவு 41A(2)

(C) Section 41 A(4)
பிரிவு 41A(4)

(D) Section 41A(3)
பிரிவு 41A(3)

10. Any Magistrate may arrest any person who commits any offence in his jurisdiction under section __________ of the Criminal Procedure Code, 1973.
எந்தவொரு நீதித்துறை குற்றவியல் நடுவரும் தனது அதிகார வரம்பில் ஏதேனும் குற்றத்தைச் செய்யும் எந்தவொரு நபரையும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ———— இன் கீழ் கைது செய்யலாம்.

(A) Section 42
பிரிவு 42

(B) Section 43
பிரிவு 43

(C) Section 41
பிரிவு 41

(D) Section 44
பிரிவு 44

11. By which Criminal Procedure Code Amendment Act, the information about the arrest has to be given to nominated person under section 50A Criminal Procedure Code, 1973
எந்த குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 பிரிவு 50 A இன் கீழ், கைது பற்றிய தகவல்கள் பரிந்துரைக்கப்பட்ட நபருக்கு வழங்க வேண்டும்

(A) Criminal Procedure Code Amendment Act 2005
குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டம் 2005

(B) Criminal Procedure Code Amendment Act 2007
குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டம் 2007

(C) Criminal Procedure Code Amendment Act 2003
குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டம் 2003

(D) Criminal Procedure Code Amendment Act 2008
குற்றவியல் நடைமுறை திருத்தச் சட்டம் 2008

12. (i) A male can witness the search of arrested female under section 51(2) of Cr.P.C

குு.ந.மு.ச பிரிவு 51(2)-ன் கீழ் கைது செய்யப்பட்ட பெண்ணைத் தேடுவதற்கு ஒரு ஆண் சாட்சியாக இருக்க முடியும்.

(ii) Only woman officer can arrest female after sunset and before sunrise

பெண் அதிகாரி மட்டுமே சூரிய அஸ்தமனத்திற்குப் பிறகும் சூரிய உதயத்திற்கு முன்பும் பெண்களைக் கைது செய்ய முடியும்.

(A) (i) is false and (ii) is true
(i) என்பது பொய், (ii) உண்மை

(B) (i) is true and (ii) is false
(i) என்பது உண்மை, (ii) என்பது பொய்

(C) Both (i) and (ii) are true
(i) மற்றும் (ii) இரண்டும் உண்மை

(D) Both (i) and (ii) are false
(i) மற்றும் (ii) இரண்டும் தவறானவை

13. The need for voice sample test is analysed under the principle of "Eminent Necessity" in
குரல் மாதிரி சோதனை "சிறந்த தேவை" என்ற கோட்பாட்டின் கீழ் எவ்வழக்கில் பகுப்பாய்வு செய்யப்படுகிறது

(A) Ritesh Sinha v. State of U.P
ரித்தேஷ் சின்ஹா எதிர்.உ.பி.மாநிலம்

(B) Kasturi Lal v. State of U.P
கஸ்தூரி லால் எதிர்.உ.பி. மாநிலம்

(C) Mahadev v. State of U.P
மகாதேவ் எதிர்.உ.பி. மாநிலம்

(D) Avinash v. State of Maharashtra
அவினாஷ் எதிர் மகாராஷ்டிரா மாநிலம்

14. If the arrest of a person is found to be illegal, then he will be discharged by
ஒரு நபரின் கைது சட்டவிரோதமானது என்று கண்டறியப்பட்டால் அவர் எதன் கீழ் விடுவிக்கப்படுவார்?

(A) Execution of own bond
சொந்த பிணை நிறைவேற்றுதல்

(B) Discharge order by Magistrate
குற்றவியல் நடுவரின் விடுவிப்பு ஆணை

(C) On Bail Order
பிணை உத்தரவில்

(D) On giving surety
பிணைக் கொடுப்பதில்

15. The person having custody of the accused should take reasonable care of health and safety of the accused under __________ of Cr.P.C, 1973.
குற்றம் சாட்டப்பட்டவரை காவலில் வைத்திருக்கும் நபர், குற்றம் சாட்டப்பட்டவரின் உடல்நலம் மற்றும் பாதுகாப்பில் கு.ந.மு.ச. 1973 ———— இன் கீழ் நியாயமான அக்கறை கொள்ள வேண்டும்.

(A) Section 56A
பிரிவு 56 A

(B) Section 55A
பிரிவு 55 A

(C) Section 55
பிரிவு 55

(D) Section 54A
பிரிவு 54 A

16. In which circumstances, the court may direct warrant of arrest to person other than police officer?
காவல் அலுவலரைத் தவிர வேறு நபருக்கு கைது பிடியாணை பிறப்பிக்க எச்சூழ்நிலைகளில் நீதிமன்றம் உத்தரவிடலாம்

(A) If there is necessity for immediate arrest
உடனடியாக கைது செய்ய வேண்டிய அவசியம் ஏற்பட்டால்

(B) No Police officer is available
காவல் அலுவலர் எவரும் உடனடியாக கிடைக்கப்பெறவில்லை

(C) Even if Police officer available
காவல் அலுவலர் இருப்பின் கூட

(D) Both (A) and (B) are true
(A) மற்றும் (B) இரண்டும் உண்மை

17. The endorsement of warrant to any police officer is under __________ of Criminal Procedure Code, 1973.
எந்தவொரு காவல் அலுவலருக்கும் குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ———— கீழ் பிடியாணை மேற்குறிப்பு செய்யப்பட்டு நிறைவேற்றப்படலாம்.

(A) Section 75
பிரிவு 75

(B) Section 71
பிரிவு 71

(C) Section 74
பிரிவு 74

(D) Section 72
பிரிவு 72

18. Abscond means
தலைமறைவு என்றால்

(A) Leave the residence for one day
ஒரு நாள் வீட்டை (குடியிருப்பை) விட்டு வெளியேறுதல்

(B) Remain in house and conceal himself for many days
வீட்டில் தங்கி பல நாட்கள் தன்மை மறைத்துக் கொள்ளுதல்

(C) Remain in house and conceal himself for one day
வீட்டில் தங்கி ஒரு நாள் தன்மை மறைத்துக் கொள்ளுதல்

(D) Both (A) and (C)
(A) மற்றும் (C) இரண்டும்

19. If not perishable, the attached property of the absconder can be sold at the expiry of
அழியக்கூடியதல்ல என்றால், தலைமறைவானவரின் இணைக்கப்பட்ட சொத்து எத்தனை மாத காலத்திற்கு பின் விற்கப்படலாம்

(A) Six months
ஆறு மாதங்கள்

(B) Three months
மூன்று மாதங்கள்

(C) One year
ஒரு வருடம்

(D) Two years
இரண்டு வருடங்கள்

20. Under which section of Cr.P.C. 1973, the restoration of abducted female can be ordered?
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 இன் எந்தப் பிரிவின் கீழ், கடத்தப்பட்ட பெண்களை மீட்க உத்தரவிடலாம்?

(A) Section 99
பிரிவு 99

(B) Section 97
பிரிவு 97

(C) Section 98
பிரிவு 98

(D) Section 96
பிரிவு 96

21. Witnesses in search warrant must be
சோதனை ஆணைகளுக்கான கட்டளையில் உள்ள சாட்சிகள் எவ்வாறு இருத்தல் வேண்டும்?

(A) Participating in raids with police for many years
பல ஆண்டுகளாக போலீசாருடன் சோதனைகளில் ஈடுபடுதல்

(B) Involved in security proceedings
பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபடுதல்

(C) Not from the locality of search
தேடல் வட்டாரத்தில் வசிப்பவர் அல்ல

(D) Living near police station
காவல் நிலையத்திற்கு அருகில் வசிப்பவர்

22. I. If a Magistrate stands outside the searching place, it can be search directed in his presence
ஒரு குற்றவியல் நடுவர் சோதனை செய்யப்படும் இடத்திற்கு வெளியே நின்றால், அது அவரது முன்னிலையில் செய்யப்படும் சோதனையாக கருதப்படலாம்.

II. A District Magistrate can impound document produced in case pending before a Sub-ordinate Magistrate

ஒரு குற்றவியல் நடுவர் முன் நிலுவையில் உள்ள வழக்கில் சமர்ப்பிக்கப்பட்ட ஆவணத்தை ஒரு மாவட்ட குற்றவியல் நடுவர் பெற்று கொள்ளலாம் (பறிமுதல் செய்யலாம்)

(A) I is true and II is false
I என்பது உண்மை, II என்பது தவறு

(B) Both I and II are false
I மற்றும் II இரண்டும் தவறானவை

(C) Both I and II are true
I மற்றும் II இரண்டும் உண்மை

(D) I is false and II is true
I என்பது பொய், II என்பது உண்மை

23. When the property attached under section 102 of Cr.P.C. can be sold in auction immediately?
கு.ந.மு.சயின் பிரிவு 102 இன் கீழ் இணைக்கப்பட்ட பொருள்களை எப்பொழுது உடனடியாக ஏலத்தில் விற்க முடியும்?

(A) If the things are perishable
பொருள்கள் அழியக்கூடியதாக இருந்தால்

(B) If the owner is known
உரிமையாளர் யாரென்று தெரிந்திருந்தால்

(C) If the owner can be found out
உரிமையாளரைக் கண்டுபிடிக்க முடிந்தால்

(D) If the value of the things more than 500 rupees
பொருட்களின் பெறுமதி 500 ரூபாய்க்கு மேற்பட்டதாக இருப்பின்

24. What shall be the time period for the security for good behaviour from habitual offenders?
வழக்கமான குற்றவாளிகளிடமிருந்து நல்ல நடத்தைக்கான பிணையம் பெறப்படும் காலஅளவு எத்தனை?

(A) Not exceeding three years
மூன்றாண்டுகளுக்கு மிகாமல்

(B) Five years
ஐந்து வருடங்கள்

(C) Four years
நான்கு ஆண்டுகள்

(D) Six years
ஆறு ஆண்டுகள்

25. To whom the order for maintenance under section 125 Cr.P.C may be granted?
கு.ந.மு.ச. பிரிவு 125Cr.P.C. யின் கீழ் பராமரிப்புக்கான ஆணை யாருக்கு வழங்கப்படலாம்?

(A) Married daughter who attained majority
உரிய வயதடைந்த திருமணமான மகள்

(B) Wife divorced by mutual consent
பரஸ்பர சம்மதத்தால் விவாகாரத்து பெற்ற மனைவி

(C) Parents able to maintain themselves
தங்களைத் தாங்களே பராமரித்துக் கொள்ள கூடிய பெற்றோர்கள்

(D) Major illegitimate child unable to maintain due to injury
காயம் காரணமாக தன்னை தானே பராமரிக்க முடியாத உரிய வயதடைந்த சட்டபூர்வமற்ற குழந்தை

26. By what means the "Sufficient Means" for maintenance under section 125 Cr.P.C is determined?
கு.ந.மு.ச. பிரிவு 125 இன் கீழ் பராமரிப்புக்கான "போதுமான வழிமுறைகள்" எதனை அடிப்படையாகக் கொண்டு தீர்மானிக்கப்படுகிறது.

(A) Visible real property
புலப்படும் உண்மையான சொத்து

(B) Particular employment
குறிப்பிட்ட வேலைவாய்ப்பு

(C) Actual Pecuniary resources
உண்மையான பொருளாதார வளங்கள்

(D) Earning capacity
சம்பாதிக்கும் திறன்

27. The Magistrate is empowered to take action on Public nuisance under section __________ of Criminal Procedure Code, 1973.
குற்றவியல் நடைமுறைக்குச் சட்டம், 1973 ———— பிரிவின் கீழ் பொது இடையூறுகள் மீது நடவடிக்கை எடுக்க குற்றவியல் நடுவருக்கு அதிகாரம் உள்ளது.

(A) Section 133
பிரிவு 133

(B) Section 131
பிரிவு 131

(C) Section 135
பிரிவு 135

(D) Section 130
பிரிவு 130

28. The criminal proceeding under section 145 Cr.P.C on disputes as to immovable property is invoked on
எந்த அசையாச் சொத்துக்கள் தொடர்பான பிணக்குகள் மீது பிரிவு 145 குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் கீழ் குற்றவியல் நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது

(A) Joint possession
கூட்டு உடைமை மீது

(B) Actual possession
நேரடி உடைமை

(C) Property under pending civil litigation
நிலுவையில் உள்ள உரிமையியல் வழக்கின் கீழ் உள்ள சொத்து

(D) Appointment of receiver
சொத்துப் பேணுநர் நியமனம்

29. The message constituting valid FIR are
செல்லுபடியாகும் முதல் தகவல் அறிக்கையை உருவாக்கும் செய்தி எது?

(A) FIR after inquest report
விசாரணை அறிக்கைக்குப் பிறகு முதல் தகவல் அறிக்கை

(B) Telephonic message of mere killing
வெறும் கொலை பற்றிய தொலைபேசி செய்தி

(C) Telephonic message recorded in station diary
நிலைய நாட்குறிப்பில் பதிவு செய்யப்பட்ட தொலைபேசிச் செய்தி

(D) Second report after investigating on oral complaint
வாய்மொழிப் புகாரின் மீது விசாரணை செய்த பின்னர் இரண்டாவது அறிக்கை

30. Under which rule of Criminal Rule of Practice, 2019 the court may issue summons to the e-mail address of the accused?
குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 எந்த விதியின் கீழ் குற்றம் சாட்டப்பட்டவரின் மின்னஞ்சல் முகவரிக்கு நீதிமன்றம் சம்மன் அனுப்பலாம்?

(A) Rule 29(19)
விதி 29(19)

(B) Rule 27(13)
விதி 27(13)

(C) Rule 28(9)
விதி 28(9)

(D) Rule 28(7)
விதி 28(7)

31. Which particular has to be avoided under the rule 42 of the Criminal Rules of practice on recording the evidence of witness?
சாட்சியின் சாட்சியங்களைப் பதிவு செய்யும்போது, குற்றவியல் நடைமுறை விதிகளின் 42வது விதியின் கீழ் தவிர்க்கப்படவேண்டிய குறிப்பு எது?

(A) Name of accused with rank in brackets
அடைப்புக்குறிக்குள் உள்ள குற்றவாளியின் பெயர்

(B) Family name of deponent
குற்றவாளியின் குடும்பப் பெயர்

(C) Name of interpreter
உரைபெயர்ப்பாளரின் பெயர்

(D) Usage of abbreviations
சுருக்கெழுத்துக்களின் பயன்பாடு

32. Recording of evidence through video conferencing is specified under ________ the Criminal Rules of Practice, 2019.
காணொளிக்காட்சி மூலம் ஆதாரங்களைப் பதிவு செய்தல் குறிப்பிடப்பட்டுள்ள குற்றவியல் நடைமுறை விதிகள், 2019

(A) Rule 52
விதி 52

(B) Rule 50
விதி 50

(C) Rule 54
விதி 54

(D) Rule 51
விதி 51

33. The seized currency notes and coins in prohibition case
மதுவிலக்கு வழக்குகளில் பறிமுதல் செய்யப்பட்ட ரூபாய் நோட்டுகள் மற்றும் நாணயங்கள்

(A) Remitted into treasury as "Criminal Court Deposit"
"குற்றவியல் நீதிமன்ற வைப்பு" என கருவூலத்திற்கு அனுப்பப்படுதல்

(B) To police officer for custody
காவல் அலுவலர் கட்டுப்பாட்டின் கீழ்

(C) To police for producing on trial
காவல் அலுவலருக்கு விசாரணையின் போது ஆஜர்படுத்துவதற்காக

(D) Kept in sealed box in Treasury and brought to court on trial
கருவூலத்தில் சீல் வைக்கப்பட்ட பெட்டியில் வைக்கப்பட்டு, விசாரணையின் போது நீதிமன்றத்திற்கு கொண்டு வரப்படுதல்

34. When a man sentenced on the 1st January to one month's imprisonment must be released?
ஜனவரி 1 ஆம் தேதி ஒரு மாத சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட ஒரு நபரை எந்த தேதியில் விடுதலை செய்ய வேண்டும்?

(A) 1st February
பிப்ரவரி 1

(B) 30th January
ஜனவரி 30

(C) 31st January
ஜனவரி 31

(D) 2nd February
பிப்ரவரி 2

35. (I) The production of Prisoners under the sentence of death for evidence is permitted without special sanction of Government.
மரண தண்டனையின் கீழ் சிறைக்கைதிகளை சாட்சியத்திற்காக ஆஜர்படுத்துவதற்கு அரசின் சிறப்பு அனுமதி இல்லாமல் அனுமதிக்கப்படுகிறது.

(II) The production of prisoner for evidence if his presence is required by sessions judge for additional evidence.

கூடுதல் சாட்சியங்களுக்காக அமர்வு நீதிபதியால் ஆணையிடப்பட்டால் சாட்சியத்திற்காக கைதியை ஆஜர்படுத்தலாம்

(A) I is false and II is true
I என்பது பொய், II என்பது உண்மை

(B) Both I and II are true
I மற்றும் II இரண்டும் உண்மை

(C) I is true and II is false
I என்பது உண்மை, II என்பது தவறு

(D) Both I and II are false
I மற்றும் II இரண்டும் தவறானவை

36. The death of disappearance of any person in the custody by police or authorized by Magistrate shall be registered as case under ________ of criminal Procedure Code, 1973.
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ———— இன் கீழ், காவல்துறையினரால் அல்லது குற்றவியல் நடுவரினால் அதிகாரமளிக்கப்பட்ட எவரேனும் நபரின் மரணம் அல்லது காணாமல் போதல் வழக்கு பதிவு செய்யப்படுதல் வேண்டும்.

(A) Section 156
பிரிவு 156

(B) Section 154
பிரிவு 154

(C) Section 150
பிரிவு 150

(D) Section 151
பிரிவு 151

37. The legal Aid is in accordance with ________ of the Criminal rules of Practice, 2019.
சட்ட உதவி குற்றவியல் நடைமுறை விதிகள், 2019 ———— யின் கீழ் உள்ளது.

(A) Chapter X
அத்தியாயம் X

(B) Chapter IX
அத்தியாயம் IX

(C) Chapter XIV
அத்தியாயம் XIV

(D) Chapter XI
அத்தியாயம் XI

38. In case of death sentence confirmation by High Court, the Sessions Judge shall issue warrant for execution on
உயர் நீதிமன்றத்தால் மரண தண்டனையை உறுதிப்படுத்தும் பட்சத்தில், அமர்வு நீதிபதி மரண தண்டனை நிறைவேற்றுவதற்கான ஆணை பிறப்பிப்பது

(A) Appeal lodged to Supreme Court
உச்ச நீதிமன்றத்தில் தாக்கல் செய்யப்பட்ட மேல்முறையீட்டு மனு

(B) Special Leave Application to appeal to Supreme Court
உயர் நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்வதற்கான சிறப்பு அனுமதி விண்ணப்பம்

(C) Appeal to Supreme Court by one of the accused
குற்றம் சாட்டப்பட்டவர்களில் ஒருவர் உச்சநீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்தல்

(D) Appeal period expired and no appeal lodged
மேல்முறையீட்டுக் காலம் காலாவதியாகிவிட்டது மற்றும் மேல்முறையீடு எதுவும் பதிவு செய்யப்படவில்லை

39. Within how many days the sessions court shall distribute copies of judgement to particular persons from the date of pronouncement of Judgement?
அமர்வு நீதிமன்றம், தீர்ப்பு அறிவிக்கப்பட்ட நாளிலிருந்து எத்தனை நாட்களுக்குள் தீர்ப்பின் நகல்களை குறிப்பிட்ட நபர்களுக்கு வழங்க வேண்டும்?

(A) 15 days
15 நாட்கள்

(B) 14 days
14 நாட்கள்

(C) 10 days
10 நாட்கள்

(D) 30 days
30 நாட்கள்

40. The letter of request to competent authority for investigation in a country outside India is governed by ___________ of Criminal Procedure Code, 1973.
இந்தியாவுக்கு வெளியே ஒரு நாட்டில் புலன் விசாரணைக்கு தகுதி வாய்ந்த அதிகாரிக்கு கோரிக்கை கடிதம் வழங்க குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 ———— இன் கீழ் நிர்வகிக்கப்படுகிறது.

(A) Section 168-A
பிரிவு 168-A

(B) Section 167-A
பிரிவு 167-A

(C) Section 166-A
பிரிவு 166-A

(D) Section 169-B
பிரிவு 169-B

41. Under Section 167 of Cr.P.C, if the investigation relates to the offence punishable with death, the Magistrate may authorize detention of accused not exceeding
குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் 167வது பிரிவின் கீழ், மரண தண்டனைக்குரிய குற்றத்துடன் விசாரணை தொடர்புடையதாக இருந்தால், குற்றம் சாட்டப்பட்டவர்களை எத்தனை நாட்கள் மிகாமல் காவலில் வைக்க குற்றவியல் நடுவருக்கு அதிகாரமுள்ளது

(A) Ninety days
தொண்ணூறு நாட்கள்

(B) Thirty days
முப்பது நாட்கள்

(C) Sixty days
அறுபது நாட்கள்

(D) Forty five days
நாற்பத்தைந்து நாட்கள்

42. The detention of women under 18 years shall be in the custody of
18 வயதிற்குட்பட்ட பெண்களின் தடுப்புக்காவலில் பின்வருவனவற்றின் காவலில் இருக்க வேண்டும்.

(A) Remand home
அடைப்பு இல்லம்

(B) Prison
சிறைச்சாலை

(C) Recognised social institution
அங்கீகரிக்கப்பட்ட சமூக நிறுவனம்

(D) Both (A) and (C)
(A) மற்றும் (C) இரண்டும்

43. What orders can be passed on petition by justified accused, if the charge sheet was not filed within prescribed period under section 167 of Cr.P.C.?
குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பிரிவு 167இன் கீழ் நிர்ணயிக்கப்பட்ட காலத்திற்குள் குற்றப்பத்திரிகை தாக்கல் செய்யப்படாவிட்டால், குற்றம் சாட்டப்பட்டவரின் மனு மீது எவ்வகை ஆணையிடப்படலாம்?

(A) Accused Released
குற்றம் சாட்டப்பட்டவர் விடுதலை

(B) Bail refused
பிணை மறுப்பு

(C) Bail granted
பிணை வழங்கப்பட்டது

(D) Accused detained
குற்றம் சாட்டப்பட்டவர் கைது

44. The Police Diaries of case under enquiry can be used as
விசாரணையின் கீழ் உள்ள வழக்கின் போலீஸ் நாட்குறிப்புகளை பயன்படுத்துவது

(A) Corroborative Evidence
உறுதிப்படுத்தும் சான்றுகள்

(B) To aid the inquiry
விசாரணைக்கு உதவுதல்

(C) Substantive evidence
நிலையான சான்றுகள்

(D) Inadmissible evidence
ஏற்றுக்கொள்ள முடியாத சான்றுகள்

45. Metropolitan/Judicial Magistrates shall submit a calendar statement along with a copy of Judgement for an offence Punishable with
பெருநகர / நீதித்துறை நடுவர்கள் எத்தண்டனைக்குரிய குற்றத்திற்கான தீர்ப்பின் நகலுடன் ஒரு நாட்குறிப்பின் பதிவு குறிப்பு அறிக்கையை சமர்ப்பிக்க வேண்டும்?

(A) One year imprisonment
ஒரு வருட சிறைத்தண்டனை

(B) Six months imprisonment
ஆறு மாத சிறைத்தண்டனை

(C) Fine of 5000 Rs. or above
5000 ரூபாய் அல்லது அதற்கு மேல் அபராதம்

(D) Two years imprisonment
இரண்டு ஆண்டுகள் சிறைத்தண்டனை

46. Expert Witness refers to
நிபுணத்துவ சாட்சி எவர் சாட்சியத்தை குறிக்கிறது?

(A) Armed force personnel
ஆயுதப்படை பணியாளர்கள்

(B) Public Servant
பொது ஊழியர்

(C) Honorary Medical Officer
கௌரவ மருத்துவ அலுவலர்

(D) Teachers of Deaf and Dumb schools
காதுகேளாதோர் மற்றும் ஊமைப் பள்ளிகளின் ஆசிரியர்கள்

47. When the accused will be considered to be acquitted?
குற்றம் சாட்டப்பட்டவர்கள் எப்பொழுது விடுவிக்கப்பட்டதாக கருதப்படுவார்கள்?

(A) No prima facie case made out
எந்த முகாந்திரமும் இல்லை

(B) Not been put on defence
எதிர்வாதம் வைக்கப்படவில்லை

(C) Before framing charges
குற்றச்சாட்டுக்களை புனையப்படுவதற்கு முன்னர்

(D) Not proved guilty
குற்றவாளி என நிரூபிக்கப்படவில்லை

48. For which cases the framing of Formal charges is mandatory?
முறையான குற்றச்சாட்டுகள் புனையப்படுவது எவ்வகை வழக்குகளில் கட்டாயமாகும்?

(A) Summon cases
அழைப்பாணை வழக்குகள்

(B) Warrant cases
பிடியாணை வழக்குகள்

(C) Summary Trial cases
சுருக்க விசாரணை வழக்குகள்

(D) Petty cases
சில்லறை (சிறு) வழக்குகள்

49. I. In summary Trial cases, accused can plead guilty by post or messenger.
சுருக்க விசாரணை வழக்குகளில், குற்றம் சாட்டப்பட்டவர்கள் தபால் அல்லது வேறு நபர் மூலம் குற்றத்தை ஒப்புக்கொள்ளலாம்.

II. Magistrate can dispense with personal attendance of complaint in summary trials.

குற்றவியல் நடுவர்கள் சுருக்க விசாரணைகளில் புகார்தாரரின் தனிப்பட்ட வருகையைத் தவிர்க்கலாம்.

(A) Both I and II are true

I மற்றும் II இரண்டும் உண்மை

(B) I is false but II is true
I என்பது தவறானது ஆனால் II என்பது உண்மை

(C) I is true but II is false
I என்பது உண்மை ஆனால் II என்பது தவறானது

(D) Both I and II are false
I மற்றும் II இரண்டும் தவறானவை

50. The offence summarily triable is
சுருக்க விசாரணை வழக்குகளுக்குரிய குற்றமானது

(A) Punishable with imprisonment of three years
மூன்று ஆண்டுகள் சிறைத்தண்டனையுடன் கூடிய தண்டனைக்குரியது

(B) Receiving stolen property of three thousand rupees
திருடப்பட்ட மூவாயிரம் ரூபாய் சொத்துக்களைப் பெறுதல்

(C) Criminal intimidation punishable upto two years imprisonment
குற்றவியல் அச்சுறுத்தல்களுக்கு இரண்டு ஆண்டுகள் வரை சிறைத்தண்டனை விதிக்கப்படலாம்

(D) Theft with value of Three thousand rupees
மூவாயிரம் ரூபாய் பெறுமதியான திருட்டு

51. In Summary Trials
சுருக்க விசாரணையில்

(A) Sentence exceeding three months shall be passed
மூன்று மாதங்களுக்கு மேற்பட்ட தண்டனை வழங்கப்படலாம்

(B) Alternative sentence in default of fine is imposed with three months imprisonment
அபராதத் தவறினால் மாற்று தண்டனையுடன் மூன்று மாத சிறைத்தண்டனை விதிக்கப்படும்

(C) High court can confer power to try offences exceeding six months imprisonment
ஆறுமாத சிறைத்தண்டனைக்கு மேற்பட்ட குற்றங்களை விசாரிப்பதற்கான அதிகாரத்தை உயர் நீதிமன்றம் வழங்க முடியும்

(D) Court can hold trial for longer sentence in interest of justice
நீதியின் நலன் கருதி நீதிமன்றம் நீண்ட தண்டனைக்குரிய குற்றத்திற்கு விசாரணையை நடத்தலாம்

52. Which provisions of Cr.P.C, 1973 deal with Plea-Bargaining?
கு.ந.மு.ச. 1973 இல் எந்த பிரிவின் கீழ் வேண்டுகோளின் கீழ் பேரம் பேசுதல் அமைகிறது?

(A) Section 265A to 265L
பிரிவு 265A முதல் 265L வரை

(B) Section 267A to 267L
பிரிவு 267A முதல் 267L வரை

(C) Section 266A to 266L
பிரிவு 266A முதல் 266L வரை

(D) Section 268A to 268L
பிரிவு 268A முதல் 268L வரை

53. For which offences the Plea-Bargaining is applicable?
மனு-பேரம் பேசுதல் எந்த குற்றங்களுக்குப் பொருந்தும்?

(A) For sentence less than seven years
ஏழு ஆண்டுகளுக்கு குறைவான தண்டனை

(B) Affecting socio-economic condition of Country
நாட்டின் சமூக-பொருளாதார நிலையைப் பாதிக்கும்

(C) Against Woman
பெண்ணுக்கு எதிராக

(D) Against Child below Fourteen years
பதினான்கு வயதுக்குட்பட்ட குழந்தைக்கு எதிராக

54. Under Plea-Bargaining, on satisfactory disposition of the case, if court finds that minimum punishment is provided under Law for the offence, the court may
மனு-பேரம் பேசுதல் கீழ், வழக்கின் தீர்ப்பின் பேரில் சட்டத்தின் கீழ் வழங்கப்படும் குற்றத்திற்கான குறைந்தபட்ச தண்டனை என்று நீதிமன்றம் கண்டறிந்தால், நீதிமன்றம்

(A) Release the Accused
குற்றம் சாட்டப்பட்டவர்களை விடுவித்தல்

(B) Sentence minimum punishment
குறைந்தபட்ச தண்டனை விதித்தல்

(C) Sentence ½ of the minimum punishment
குறைந்தபட்ச தண்டனையின் 1/2 விகிதம் தண்டனை விதித்தல்

(D) Sentence ¼ of the minimum punishment
குறைந்தபட்ச தண்டனையின் 1/4 விகிதம் தண்டனை விதித்தல்

55. The Chapter Plea-Bargaining is incorporated in Cr.P.C by
கு.ந.மு.ச. 1973 இல் மனு-பேரம் பேசுதல் என்ற அத்தியாயம் சட்டத் திருத்தத்தால் இணைக்கப்பட்டது.

(A) Criminal Law Amendment Act, 2005
குற்றவியல் சட்டத் திருத்தம் சட்டம், 2005

(B) Criminal Law Amendment Act, 2007
குற்றவியல் சட்டத் திருத்தம் சட்டம், 2007

(C) Criminal Law Amendment Act, 2008
குற்றவியல் சட்டத் திருத்தம் சட்டம், 2008

(D) Criminal Law Amendment Act, 2003
குற்றவியல் சட்டத் திருத்தம் சட்டம், 2003

56. Section 300(1) of the Cr.P.C, 1973 is in conformity with
கு.ந.மு.ச. 1973 இன் பிரிவு 300(1) எந்த அரசியலமைப்பு சட்ட பிரிவின் படி அமைகிறது?

(A) Article 20(2) of the Constitution
அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 20(2)

(B) Article 21 of the Constitution
அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 21

(C) Article 20(1) of the Constitution
அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 20(1)

(D) Article 20(3) of the Constitution
அரசியலமைப்பு சட்டம் ஷரத்து 20(3)

57. The Compoundable offences are
சமரச தீர்வு குற்றங்கள் என்பது

(A) Cognisable offences
பிடியாணை வேண்டாக் குற்றங்கள்

(B) By previous conviction liable to enhanced punishment
முந்தைய குற்றத்தின் மூலம் அதிகரிக்கப்பட்ட தண்டனைக்கு ஆளாக நேரிடும்

(C) Offences not grave in nature
இயற்கையில் கடுமையான குற்றமாக இல்லை

(D) Appeal pending after conviction on offences
குற்றங்கள் மீதான தண்டனைக்குப் பிறகு மேல் முறையீடு நிலுவையில் உள்ளது

58. Under which provision of Cr.P.C, 1973, the accused unsound person is released pending investigation?
கு.ந.மு.ச. 1973 இன் எந்த பிரிவின் கீழ், குற்றம் சாட்டப்பட்ட மனநலமற்ற நபர் விசாரணை நிலுவையின் போது விடுவிக்கப்படுகிறார்?

(A) Section 330
பிரிவு 330

(B) Section 328
பிரிவு 328

(C) Section 329
பிரிவு 329

(D) Section 326
பிரிவு 326

59. The Appeal from conviction by Registrar deemed to be civil courts shall lie in
சிவில் நீதிமன்றங்களாகக் கருதப்படும் பதிவாளரின் தண்டனையிலிருந்து மேல்முறையீடு எந்த நீதிமன்றத்தில் செய்யப்படும்

(A) High Court
உயர் நீதிமன்றம்

(B) Sessions Court
அமர்வு நீதிமன்றம்

(C) Supreme Court
உச்ச நீதிமன்றம்

(D) Judicial Magistrate Courts
நீதித்துறை குற்றவியல் நீதிமன்றங்கள்

60. The Judgement in any criminal court shall be pronounced under __________ of Cr.P.C
எந்தவொரு குற்றவியல் நீதிமன்றத்திலும் தீர்ப்பு கு.ந.மு.ச. 1973 இன் ———— கீழ் வழங்கப்படும்.

(A) Section 351
பிரிவு 351

(B) Section 350
பிரிவு 350

(C) Section 353
பிரிவு 353

(D) Section 352
பிரிவு 352

61. Under section 357A of Cr.P.C., 1973 the State or District Legal Service Authority shall complete the enquiry for the award of compensation within
கு.ந.மு.ச. 1973 பிரிவு 357A இன் கீழ், இழப்பீடு வழங்குவதற்கான விசாரணையை மாநில அல்லது மாவட்ட சட்ட பணிகள் ஆணையம் முடிக்க வேண்டிய கால அளவு

(A) Two months
இரண்டு மாதங்கள்

(B) Four months
நான்கு மாதங்கள்

(C) Three months
மூன்று மாதங்கள்

(D) One month
ஒரு மாதம்

62. The compensation awarded for groundlessly arrested person must not exceed
ஆதாரமின்றி கைது செய்யப்பட்ட நபருக்கு வழங்கப்படும் இழப்பீடு இதற்கு அதிகமாக இருக்கக்கூடாது

(A) Two Thousand Rupees
இரண்டாயிரம் ரூபாய்

(B) Thousand Rupees
ஆயிரம் ரூபாய்

(C) Ten Thousand Rupees
பத்தாயிரம் ரூபாய்

(D) Five Thousand Rupees
ஐயாயிரம் ரூபாய்

63. First offenders are convicted of offence punishable with
முதல் குற்றவாளிகள் தண்டனைக்குரிய எந்த குற்றத்திற்காக தண்டிக்கப்படுகிறார்கள்?

(A) imprisonment for life and under 21 years of age
ஆயுள் தண்டனை மற்றும் 21 வயதுக்கு கீழ்

(B) imprisonment of seven year and above 21 years of age
ஏழு ஆண்டுகள் சிறைத்தண்டனை மற்றும் 21 வயதுக்கு மேல்

(C) Death punishment and as woman
மரண தண்டனை மற்றும் பெண்ணாக உள்ளபோது

(D) Punished on two or more occasions
இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட சந்தர்ப்பங்களில் தண்டிக்கப்பட்டது

64. The Accused can be released on probation of Good conduct under ________ of Cr.P.C, 1973.
குற்றஞ்சாட்டப்பட்டவர் நல்ல நடத்தை கண்காணிப்பு கு.ந.மு.ச. 1973 ———— கீழ் விடுவிக்கப்படலாம்.

(A) Section 355
பிரிவு 355

(B) Section 328
பிரிவு 328

(C) Section 350
பிரிவு 350

(D) Section 360
பிரிவு 360

65. The copy of Judgement shall be given on payment of fees to
தீர்ப்பின் நகல், கட்டணம் செலுத்தினால் வழங்கப்படுவது

(A) Accused sentenced to imprisonment
சிறைத்தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு

(B) On application by the person affected by Judgement
தீர்ப்பால் பாதிக்கப்பட்ட நபரின் விண்ணப்பத்தின் மீது

(C) On application of accused
குற்றவாளியின் விண்ணப்பத்தின் பேரில்

(D) Accused sentenced to Death
மரண தண்டனை விதிக்கப்பட்ட குற்றவாளிக்கு

66. The High Court may confirm death sentence or annual the conviction under ________ of Cr.P.C, 1973.
உயர்நீதிமன்றம் கு.ந.மு.ச. 1973 ———— பிரிவின் கீழ் மரண தண்டனையை உறுதி செய்யலாம் அல்லது ரத்து செய்யலாம்.

(A) Section 368
பிரிவு 368

(B) Section 365
பிரிவு 365

(C) Section 366
பிரிவு 366

(D) Section 369
பிரிவு 369

67. In High Court, case inquired by two or more Judges, the confirmation of sentence has to be signed atleast by
உயர்நீதிமன்றத்தில் இரண்டு அல்லது அதற்கு மேற்பட்ட நீதிபதிகள் விசாரிக்கும் வழக்கில், தண்டனையை உறுதி செய்வதில் குறைந்தபட்சம் எத்தனை நீதிபதிகள் கையொப்பமிட வேண்டும்?

(A) All the Judges
அனைத்து நீதிபதிகள்

(B) Two Judges
இரண்டு நீதிபதிகள்

(C) Single Judge
தனி நீதிபதி

(D) Majority Judges
பெரும்பான்மை நீதிபதிகள்

68. Under which provision of the Criminal Procedure Code, 1973, Magistrate has the power to order person to give specimen signature?
மாதிரி கையொப்பம் வைக்க நபருக்கு உத்தரவிட குற்றவியல் நடுவருக்கு குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 எந்த பிரிவின் கீழ் அதிகாரமுள்ளது?

(A) Section 301A
பிரிவு 301A

(B) Section 310A
பிரிவு 310A

(C) Section 311A
பிரிவு 311A

(D) Section 302A
பிரிவு 302A

69. Any person convicted on a trial held by Assistant Sessions Judge may appeal to
உதவி அமர்வு நீதிபதி நடத்திய விசாரணையில் குற்றவாளி என அறிவிக்கப்பட்ட எவரும் எந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்?

(A) Session Judge
அமர்வு நீதிமன்றம்

(B) Supreme Court
உச்ச நீதிமன்றம்

(C) High Court
உயர் நீதிமன்றம்

(D) Special Courts
சிறப்பு நீதிமன்றங்கள்

70. No appeal in petty cases if
சிறிய வழக்குகளில் மேல்முறையீடு இல்லை

(A) High Court passes imprisonment not exceeding six months
உயர்நீதிமன்றம் ஆறு மாதங்களுக்கு மிகாமல் சிறைத்தண்டனை விதிக்கிறது

(B) Sessions court passes imprisonment exceeding 3 months and less than 6 months
அமர்வு (செஷன்ஸ்) நீதிமன்றம் 3 மாதங்களுக்கு மேல் மற்றும் 6 மாதங்களுக்கும் குறைவான சிறைத்தண்டனை விதிக்கிறது

(C) Magistrate of the First Class passes fine of Rs. 200
முதலாம் குற்றவியல் நடுவர் 200 ரூபாய் அபராதம் விதித்தல்

(D) Metropolitan Magistrate imposes fine of Rs. 300
பெருநகர குற்றவியல் நடுவர் 300 ரூபாய் அபராதம் விதித்தல்

71. When the appeal shall abate?
மேல்முறையீடு எப்பொழுது முடிவுறும்?

(A) On the death of accused
குற்றம் சாட்டப்பட்டவரின் மரணம்

(B) On application by near relatives of accused within 30 days of his death
அவர் இறந்த 30 நாட்களுக்குள் குற்றம் சாட்டப்பட்டவரின் நெருங்கிய உறவினர்களின் விண்ணப்பத்தின் பேரில்

(C) Appeal from sentence of fine
அபராதத் தண்டனையிலிருந்து மேல்முறையீடு

(D) On the death of victim
பாதிக்கப்பட்டவரின் மரணம்

72. If the accused person has pleaded guilty and has been convicted by High court, then appeal can be made to
குற்றம் சாட்டப்பட்ட நபர் குற்றத்தை ஒப்புக்கொண்டு, உயர் நீதிமன்றத்தால் தண்டிக்கப்பட்டிருந்தால், எந்த நீதிமன்றத்தில் மேல்முறையீடு செய்யலாம்?

(A) Supreme Court
உச்ச நீதிமன்றம்

(B) Sessions Court
அமர்வு நீதிமன்றம்

(C) Metropolitan Magistrate
பெருநகர குற்றவியல் நடுவர்

(D) No appeal can be made
மேல்முறையீடு செய்ய முடியாது

73. The maximum period for which under trial prisoner can be detained under section 436A Criminal Procedure Code, 1973 is
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 பிரிவு 436A-ன் கீழ் விசாரணைக் கைதியை தடுத்து வைக்கக்கூடிய அதிகபட்ச காலம்

(A) Upto ½ of the imprisonment period for that offence
அந்தக் குற்றத்திற்கான சிறைத் தண்டனைக் காலத்தின் 1/2 வரை

(B) Upto ¼ of the imprisonment period for that offence
அந்தக் குற்றத்திற்கான சிறைத் தண்டனைக் காலத்தின் 1/4 வரை

(C) Upto ¾ of the imprisonment period for that offence
அந்தக் குற்றத்திற்கான சிறைத் தண்டனைக் காலம் 3/4 வரை

(D) Full imprisonment period for that offence
அந்தக் குற்றத்திற்கான முழு சிறைத் தண்டனைக் காலம்

74. The bail may be granted for non-bailable offences if
ஜாமீனில் வெளிவர முடியாத குற்றங்களுக்கு பிணை வழங்கப்படுவது

(A) Accused is above 16 years
குற்றம் சாட்டப்பட்டவர் 16 வயதுக்கு மேற்பட்டவராக இருத்தல் வேண்டும்

(B) Accused may be required for identification
குற்றம் சாட்டப்பட்டவர் அடையாளம் காணத் தேவைப்படலாம்

(C) On reasonable grounds of guilty of offence punishable with death
மரண தண்டனைக்குரிய குற்றத்தின் குற்றவாளியின் நியாயமான காரணங்களின் அடிப்படையில்

(D) Previously convicted for offence with more than 3 years
3 ஆண்டுகளுக்கும் மேலான குற்றத்திற்காக முன்னர் தண்டிக்கப்பட்டவர்

75. Under which provision of Criminal Procedure Code, 1973, Anticipatory Bail is granted?
குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 எந்த பிரிவின் கீழ் முன் பிணை வழங்கப்படுகிறது?

(A) Section 430 of Cr.P.C
பிரிவு 430

(B) Section 436 of Cr.P.C
பிரிவு 436

(C) Section 438 of Cr.P.C
பிரிவு 438

(D) Section 431 of Cr.P.C
பிரிவு 431

76. The declaration of the surety before the court as to the number of persons to whom he has stood as surety in under
அவர் எத்தனை நபர்களுக்கு ஜாமீன் அளித்துள்ளார் என்பது குறித்து நீதிமன்றத்தின் முன் பிணை அறிவிப்பின் கீழ்

(A) Section 440A of Cr.P.C 1973
கு.ந.மு.ச. 1973 இன் பிரிவு 440A

(B) Section 442A of Cr.P.C 1973
கு.ந.மு.ச. 1973 இன் பிரிவு 442A

(C) Section 441A of Cr.P.C 1973
கு.ந.மு.ச. 1973 இன் பிரிவு 441A

(D) Section 444A of Cr.P.C 1973
கு.ந.மு.ச. 1973 இன் பிரிவு 444A

77. The classification of offences is given in the code of criminal Procedure is under
குற்றவியல் நடைமுறைச் சட்டத்தில் குற்றங்களின் வகைப்பாடு கொடுக்கப்பட்டுள்ளது

(A) Ist Schedule
முதலாம் அட்டவணை

(B) IInd Schedule
இரண்டாம் அட்டவணை

(C) IVth Schedule
நான்காவது அட்டவணை

(D) Section 422A
பிரிவு 422A

78. In a case including cognizable and non-cognizable offences under section 155 Cr.P.C 1973 the investigation of a
155 கு.ந.மு.ச. 1973 இன் பிரிவின் கீழ் பிடியாணை வேண்டாம் மற்றும் பிடியாணை வேண்டும் குற்றங்கள் உட்பட ஒரு வழக்கு விசாரணைக்கு

(A) Non-cognizable offence require any sanction of the Magistrate
பிடியாணை வேண்டுதல் குற்றத்திற்கு குற்றவியல் நடுவரின் அனுமதி தேவை

(B) Non-cognizable offence does not require any sanction of the Magistrate
பிடியாணை வேண்டுதல் குற்றத்திற்கு குற்றவியல் நடுவரின் அனுமதி தேவையில்லை

(C) Cognizable offence require sanction of the Magistrate
பிடியாணை வேண்டாக் குற்றத்திற்கு குற்றவியல் நடுவரின் அனுமதி தேவை

(D) Cognizable offence does not require any sanction of the Magistrate
பிடியாணை வேண்டாக் குற்றத்திற்கு குற்றவியல் நடுவரின் அனுமதி தேவையில்லை

79. When a Judge shall be deemed personally interested?
ஒரு நீதிபதி தனிப்பட்ட முறையில் நலன் உள்ளதாக எப்பொழுது கருதப்படும்?

(A) Concerned therein in public capacity
பொது அதிகார அடிப்படையில் அக்கறை இருந்தால்

(B) Viewed the place of offence
குற்றம் நடந்த இடத்தைப் பார்வையிட்டால்

(C) In Appeal passed from Judgement passed by himself
அவரே வழங்கிய தீர்ப்பிலிருந்து எழுந்த மேல்முறையீட்டில்

(D) Made inquiry relevant to case
வழக்கு தொடர்பான விசாரணை அவரால் நடத்தப்பட்டது

80. Whoever knowingly carry arms in any procession contravening section 144A of the Code of Criminal Procedure, 1973 is punishable with

குற்றவியல் நடைமுறைச் சட்டம், 1973 இன் 144A பிரிவுக்கு சட்ட முரணான எந்த ஊர்வத்திலும் தெரிந்தே ஆயுதம் ஏந்தியவர்களுக்கான தண்டனை

(A) Imprisonment and fine upto 6 months and 2000 Rupees
6 மாதங்கள் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் 2,000 ரூபாய்

(B) Imprisonment and fine upto one year and 1000 Rupees
ஒரு வருடம் வரை சிறைத்தண்டனை மற்றும் அபராதம் 1,000 ரூபாய்

(C) Imprisonment and fine upto 2 years and 2000 Rupees
2 ஆண்டுகள் வரை சிறை மற்றும் அபராதம் 2,000 ரூபாய்

(D) Imprisonment and fine upto 3 years and 2000 Rupees
3 ஆண்டுகள் வரை சிறை தண்டனை மற்றும் அபராதம் 2000 ரூபாய்

T·C-105

**122/DD/23**

| Register Number | | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|---|

# DEPARTMENTAL EXAMINATIONS

## THE CIVIL AND CRIMINAL JUDICIAL TEST FOR MEMBERS OF THE JUDICIAL DEPARTMENT — PART - I

(With Books)

Maximum Time : 30 minutes

Maximum Marks : 20

***IMPORTANT INSTRUCTIONS***

**DESCRIPTIVE TYPE**

விரிவான விடையளிக்கும் வகை வினாத்தாள்

**Read the following instructions carefully before beginning to answer the questions.**

வினாக்களுக்கு விடையளிக்க தொடங்கும் முன்பு கீழ்க்கண்ட அறிவுரைகளை கவனமாக படிக்கவும்.

1. Answers in excess of the prescribed number of questions appearing at the end of the answer book will not be valued.

   விடைகளை குறிப்பிட்டுள்ள எண்ணிக்கைக்கு அதிகமாக எழுதியிருப்பின், விடைத்தாளின் இறுதியில் உள்ள அதிக எண்ணிக்கையிலான விடைகள் மதிப்பீடு செய்யப்படாது.

2. Answer should be in brief and to the point and need not be a verbatim reproduction of printed pages. (Applicable for tests to be answered "with books" only).

   விடைகள் சுருக்கமாகவும், வினாவிற்கு உரிய அளவிலும் இருக்க வேண்டும். புத்தகத்தில் உள்ளவற்றை அப்படியே வார்த்தைக்கு வார்த்தை திரும்ப எழுதக் கூடாது. (இக்குறிப்பு புத்தகங்களுடன் எழுதும் தேர்விற்கு மட்டும் பொருந்தும்)

3. In case of doubt, English version is the final.

   வினாக்களில் சந்தேகமிருப்பின் ஆங்கில வடிவில் கொடுக்கப்பட்டுள்ள வினாக்களே இறுதியானது.

**[Turn over**

Answer any FOUR questions.

பின்வருவனவற்றுள் எவையேனும் நான்கிற்கு விடையளி. (4 × 5 = 20)

1. Describe the constitution and Jurisdiction of Criminal Courts under the appropriate provisions of CRPC.

குற்றவியல் நடைமுறைச் சட்டத்தின் பொருத்தமான வகையங்களின் கீழ் குற்றவியல் நீதிமன்றங்களின் அமைப்பு மற்றும் அதிகார வரம்பை விவரி.

2. When the court shall take cognizance of Defamation offence punishable under Chapter XXI of the Indian Penal Code?

இந்தியத் தண்டனைச் சட்டத்தின் அத்தியாயம் XXI இன் கீழ் தண்டனைக்குரிய அவதூறுக் குற்றத்தை நீதிமன்றம் எப்போது கவனத்தில் கொள்ள வேண்டும்?

3. Describe the implementation and execution of Victim Compensation Scheme.

பாதிக்கப்பட்டோர் இழப்பீட்டுத் திட்டத்தை செயல்படுத்துதல் பற்றி விவரி.

4. "No person shall neglect or refuse to maintain his wife, children and parents" Discuss.

"எந்த ஒரு மனிதனும் தன் மனைவி, பிள்ளைகள், பெற்றோர் ஆகியோரைப் புறக்கணித்துவிடக் கூடாது, பராமரிக்க மறுக்கக் கூடாது". ஆய்வுரை.

5. "Separate Charge is the Rule and Joint charge in the exception". Explain.

"தனி குற்றம் வனைதல் என்பது விதி மற்றும் கூட்டு குற்றம் வனைதல் என்பது விதிவிலக்கு". விளக்குக.

6. When the Anticipatory Bail may not be granted in Non-Bailable offences?

பிணையில் வெளிவர முடியாத குற்றங்களில் எப்பொழுது முன்பிணை வழங்கப்படாது?

———————